<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

அமர்வு வழக்கு எண் : 257/2019

அரசுதரப்பு 7 -வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சங்கர் | வயது | : | 44 |
| தந்தை/கணவர் பெயர் | : | கண்ணன் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிமுறைகளின்படி 24.11.2022 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை - நான் தற்போது பண்ருட்டி கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருக்கிறேன். பண்ருட்டியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளில் நவீன் என்பவரை மட்டும் தெரியும். 21.12.2018 அன்று காடாம்புலியூர் காவல்நிலைய ஆய்வாளரிடமிருந்து எனக்கு போன் வந்தது. காடாம்புலியூர் காவல்நிலையம் சென்றபோது நவீன் என்பவர் எங்கள் முன்னிலையில் காவல் ஆய்வாளரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். 11.12.2018 அன்று காலை நவீன், சத்யராஜ், சிவசங்கர் ஆகியோர் கரையாம்புத்தூர் சென்று மது அருந்தி விட்டு திரும்ப வரும்போது பண்ருட்டி அடுத்த ஆர்டிஓ ஆபிஸ் எதிரில் எதிரே வந்த அரசு பேருந்து உரசுவதுபோல் வந்ததால் நிலைதடுமாறி கீழே விழுந்து

விட்டதாகவும், சிவசங்கரன் என்பவருக்கு காலில் அடிபட்டதாகவும், அதனால் கோபமடைந்து எதிரே வரும் அரசு பேருந்து மீது தாக்குதல் நடத்த முடிவு செய்து எதிரே வந்த அரசு பேருந்து மீது கற்களையும், கண்ணாடி குண்டுகளையும் வீசி கண்ணாடியை உடைத்தார்கள். மீனாட்சி தனியார் பேருந்தின் கண்ணாடியை உடைத்ததாகவும், தாமரைக்குளம் அருகே அரசு பேருந்தின் கண்ணாடியை உடைத்ததாகவும், அடுத்து செல்வகுமார் தனியார் பேருந்தின் கண்ணாடியை உடைத்ததாகவும், அதற்கடுத்து பாவைக்குளம் அருகே அரசு பேருந்தின் கண்ணாடியை உடைத்ததாகவும், அதன்பிறகு பாலமுருகன் என்ற தனியார் பேருந்தின் கண்ணாடியை உடைத்ததாகவும், அதன்பிறகு ஆஞ்சநேயர் கோயில் அருகே மீதமுள்ள கற்களையும், குண்டுகளையும் வீசி சென்றதாகவும், அதன் பிறகு 2 நாட்கள் கழித்து இந்த தகவல் வாட்ச்அப் மூலமாக தெரிந்து கொண்டு போலிசில் பிடிபட்டால் அடித்து விடுவார்கள் என்று கொஞ்சிகுப்பம் அய்யனார் கோயில் பின்புறம் 16.12.2018 அன்று மூவரும் கூடி பேசியதாகவும், அந்த நேரத்தில் போலிசார் சுற்றி வளைத்து பிடித்ததாகவும், நவீன் மட்டும் மறுநாள் வழக்கறிஞர் உதவியுடன் பண்ருட்டி கோர்ட்டில் ஆஜரானார் என்றும் வாக்குமூலம் அளித்தார். கற்கள், குண்டுகள் வீசிய இடத்தையும், பல்சர் வாகனம் மறைத்து வைத்த இடத்தையும் காட்டுவேன் என்றும் கூறினார். இதுகுறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள். (எதிரிதரப்பு ஆட்சேபணையோடு பதிவு செய்யப்பட்டது) என்னிடம்காட்டப்படும் A3 ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் அசாஆ.4 ஆகும். அன்றைக்கு நான் 3 கையெழுத்து போட்டேன். ( A1, A2 ஒப்புதல் வாக்குமூலத்தை பார்த்த சாட்சி அந்த கையெழுத்து என்னுடையதுதான் என்று

ஒப்புக்கொண்டுள்ளார். அந்த கையெழுத்து அசாஆ.5 ஆகும்.) ஆஞ்சநேயர் கோயில் பின்னால் போலிசார் கற்களை கைப்பற்றினார்கள். இது குறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - காடாம்புலியூர் காவல்நிலையம் அருகே காம்ப்ளக்ஸ், கடைகள் உள்ளன. மக்கள் நடமாட்டம் உள்ளது. நான் மொத்தம் 3 கையெழுத்து போட்டேன். வேறு கையெழுத்து போடவில்லை. மகசரிலும் நான் கையெழுத்து போட்டேன். கிராம உதவியாளர்தான் என்னுடன் கையெழுத்து போட்டார். எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும், நான் வெள்ளைத்தாளில் நானும், என் உதவியாளரும் கையொப்பம் இட்டோம் என்றும், போலிசாருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

அமர்வு வழக்கு எண் : 257/2019

அரசுதரப்பு 8-வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராயர் | வயது | : | 63 |
| தந்தை/கணவர் பெயர் | : | மாயவன் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிமுறைகளின்படி 24.11.2022 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை - நான் தற்போது பணி ஓய்வு பெற்று கீழிருப்பு கிராமத்தில் வசிக்கிறேன். 21.12.2018 அன்று நானும், விஏஓவும் அலுவலகத்தில் இருந்தபோது காடாம்புலியூர் காவல்நிலையத்திலிருந்து ஆய்வாளர் போன் செய்து நிலையம் வர சொன்னதின்பேரில் நானும், விஏஓவும் காவல்நிலையம் சென்றோம். பஸ்ஸை குண்டால் அடித்து சேதப்படுத்திய பார்ட்டியை விசாரித்து கொண்டிருந்தார்கள். என்ன விசாரித்தார்கள் என்று தெரியாது. கையெழுத்து போட்டேன். எத்தனை கையெழுத்து என்று ஞாபகமில்லை. A3 ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை. A1,A2 ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் அசாஆ.6 ஆகும்.

சாட்சி பிறழ்சாட்சியாக கருத அரசுதரப்பில் அனுமதி கேட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை - போலிசார் விசாரணையில் கடந்த 21.012.2018 அன்று காவல்நிலையத்தில் ஆஜர் எதிரிகளை பார்த்ததாகவும், அவர்கள் எங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், கூறிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - காவல்நிலையம் அருகில் காம்ப்ளக்ஸ் உள்ளது. மக்கள் நடமாட்டம் எப்போதும் உண்டு. நான் ஸ்டேஷன் சென்றபோது கிராமமக்கள் யாரும் ஸ்டேஷனில் இல்லை. வெள்ளைத்தாளில் கையெழுத்து போட்டேனா, எழுதிய பேப்பரில் கையெழுத்து போட்டேனா என்றால் ஞாபகமில்லை. நானும், விஏஓவும் ஒன்றாக சென்றோம். அப்போது பகல் 1.00 மணி இருக்கும். நாங்கள் போனவுடன் என்னிடமும், விஏஓவிடமும் கையெழுத்து வாங்கினார்கள்.

மறுவிசாரணை - இல்லை.